வழி

வக்கீல் குமாஸ்தா விருத்தாசலம் பிள்ளை என்றைக்கும் போல விடிகாலை ஐந்து மணிக்கு எழுந்துகொண்டார். நட்சத்திரங்கள் மறையாத வானம் ஜன்னலில் தெரிந்தது. சைக்கிளை அடுப்படி சந்தில் இருந்து வெளியே எடுத்துக்கொண்டு வந்தார். சோப் டப்பாவும் வலைத்துண்டுமாக நந்தவனத்துக்குக் குளிக்கப் புறப்பட்டபோது தெரு தூக்கத்தில் மூழ்கியிருந்தது. முப்பது வருட தினப் பழக்கம் இது. சைக்கிள் அவர் யோசனைக்கு இடம் தந்தபடி தானே போய்க்கொண்டிருந்தது. காலையில் கோர்ட்டுக்கு வரப்போகும் சிங்கிகுளம் கொலை கேஸ் பற்றி யோசித்தார். ஒரு தெரு தாண்டும் முன்பு அது கலைந்து மூத்தவளுக்குப் பார்த்த மாப்பிள்ளை பற்றிய யோசனையாக உருமாறியது.

இருள் பம்மிய வீதியில் சைக்கிள் சென்றபடியிருந்தது. எல்லா வீடுகளும், தெருவும் மனிதர்களும் பார்த்துப் பழகிய தொல் பொருள்களாகவே அவருக்குத் தெரிந்தன. மனது வாயுத் தொல்லைக்குரிய மருந்து, வீட்டு வாடகை, வரப்போகும் அம்மன்கொடை என உருமாறிச் சுழன்றுகொண்டே வந்தது. கல் பரவிய தெருக்களில் சைக்கிள் போகும்போது நாய்கள் விழித்துக் கொண்டன.

கடலைக்காரத் தெருவைக் கடந்து வலது பக்கமாகத் திரும்பினார். நீண்ட தானாக்கார வீதி தெரிந்தது. குளிர்கால இரவென்பதால் ஜன்னல் மூடப்பட்ட வீடுகள் ஈரமேறி இருந்தன. தானாக்காரத் தெருவைக் கடக்கும் முன்பே அடுத்தது வாடியான் தெரு, அடுத்து ஒரே சந்து, பிறகு நந்தவனம் என மனம் முந்தியது. சைக்கிள் வாடியான் தெருவுக்குள் நுழைந்தது. மிகக் குறுகலான தெரு. அதன் முதல் வீடாக இருந்தது பச்சை பெயிண்ட் அடித்த வியெஸ்வி வீடு. தாண்டினால் வரிசையாக

இரு புறமும் வீடுகள். யோசித்தபடியே பரிச்சயமான அத் தெருவினுள் போய்க்கொண்டிருந்தார். தெருவின் கடைசி வீடு காரையார் வீடு. கம்பியிட்ட திண்ணையும் ஆறு படிகளும் கொண்டது. வலப்புறமாகத் திரும்பினால் சுப்பையா கோனார் சந்து. அதன் முடிவில் திலாக்கிணறு உள்ள நந்தவனமிருந்தது. சைக்கிளில் காரையார் வீட்டைக் கடக்கும்போது பார்த்தார். விடிவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. எதையோ யோசித்தபடி வலது பக்கம் சைக்கிளைத் திருப்பி மிதித்தார். சைக்கிள் வியெஸ்பி வீட்டைக் கடந்து சென்றது. ஒரு நிமிஷ நேரம் திகைத்தவராக சைக்கிளை மெதுவாக ஓட்டினார். சைக்கிள் வாடியான் தெருவுக்குள்தான் போய்க்கொண்டிருந்தது. இப்போதுதான் இதைக் கடந்து போனோம் எனத் தோணியது. ஒருவேளை கடந்து போகவில்லையோ, ஏதோ யோசனைதான் கடந்ததாக நினைக்கச் செய்துவிட்டதோ, என சுயசமாதானம் கொண்டவராக காரையார் வீட்டைக் கடந்தபோது அதே விடிவிளக்கு எரிந்துகொண்டிருந்தது.

வலது பக்கம் சைக்கிளைத் திருப்பி ஓட்ட வியெஸ்வி வீட்டு முன்பு திரும்பி ஊர்ந்தது. வாடியாள் தெரு தாண்டினால் சுப்பையா கோனார் சந்தல்லவா வர வேண்டும். இது எப்படி வாடியான் தெருவே திரும்பவும் வருகிறது. ஒருவேளை தான் இன்னமும் தூக்கத்தில் கனவு கண்டு கொண்டிருக்கிறோமோ? இது கனவில்லை; விழித்துக்கொண்டுதானே இருக்கிறோம் எனப் புரியும்போது பாதித் தெரு வந்துவிட்டது. சைக்கிளை நிறுத்தி இறங்கி பின்னாடி பார்த்தார். வியெஸ்வி வீட்டு வாழை மரம் காற்றில் ஆடிக்கொண்டிருந்தது.

இது ஏதோ மனப்பிரமைதான் என்றபடி திரும்பவும் சைக்கிளை மிதித்தார். கடைசி வீட்டு விடிவிளக்கு வரை வந்துவிட்டு வீட்டு வாசலைக் கடந்தது. விருத்தாசலம் பிள்ளைக்கு எதுவுமே புரியவில்லை. இது எப்படி சாத்தியம்? தெரு மூடிக்கொண்டு விட்டதா என்ன? தெருவின் முதல் வீடும், கடைசி வீடும் எப்படி அடுத்தடுத்த வீடாக இருக்கும். திகைப்பும் பயமும் கவ்வ சைக்கிளை உருட்டிக்கொண்டு நடந்தார். தெரு தன்னைப் பூட்டிக் கொண்டு விட்டதா? அப்படியும் சாத்தியமா? இது நிஜமானால் இதில் இருந்து வெளியேறவே முடியாதா? யோசிக்க யோசிக்க வேஷ்டியை இறுக்கிக் கட்டிக்கொண்டு மூடிய வீடுகளைப் பார்த்தார். எல்லாக் கதவும் உறைந்திருந்தன. ஒரு வீட்டுக்கும் மறு

வீட்டுக்கும் இடைவெளியே இல்லை. தப்பிக்க முடியாத பொறியில் அகப்பட்டுக்கொண்டு விட்டதாகத் தோன்றியது. உடலை நடுக்கமடையச் செய்தது. துருவேறிய ஜன்னல் கம்பிகள், இருண்ட வானம் எல்லாமும் பீதி கொள்ளச் செய்தன. சைக்கிளை உருட்டிக்கொண்டு காரையார் வீடு வரை வந்தார். வலது பக்கம் இருள் படர்ந்திருந்தது. மிக மெதுவாகத் திரும்பினார். அதே வியெஸ்வி வீடு. பயம் முற்றாக அவரைப் பற்றிக்கொண்டது. மனைவி, மகள், கடன், கோர்ட், சிங்கிகுளம் கொலை கேஸ் என எண்ணம் குடை ராட்டினம் போலச் சுழன்று அதிவேகமாகியது. தனக்குத் துளியும் பரிச்சயமற்ற தெரு போலத் தென்பட்டது. யாராவது வீட்டின் கதவைத் திறந்து வெளிப்பட மாட்டார்களா எனக் காத்துக்கொண்டிருந்தார். எவரும் கதவு திறக்கவில்லை. தான் ஒருவேளை அதிகாலை என நினைத்துக் கொண்டு நள்ளிரவில் புறப்பட்டு வந்துவிட்டோமா, வீட்டுக் கடிகாரம் காட்டிய நேரம் சரியானதுதானா? யோசிக்க யோசிக்கக் குழம்புகிறது. மனத்தைத் தேற்றிக்கொண்டபடி சைக்கிளை நிறுத்திவிட்டு ஓடிவிடலாமா என எண்ணம் வந்தது. அதுதான் சரியான வழி. சைக்கிளைப் பூட்டி நிறுத்தினார். ஆகாசத்தை ஏறிட்டுப் பார்த்தார். ஒரு நட்சத்திரம் கூட இல்லை. ஒளிந்து கொண்டு விட்டனவா. கண்ணை மூடிக்கொண்டு ஓடுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்றபடி தெரு அதிர ஓடத் தொடங்கினார். நினைத்தது போல ஓடுவது எளிதாக இருக்க வில்லை. உடம்பு அதிர்ந்து மூச்சு வாங்கியது. காரையார் வீடு திரும்பும்போது கண்ணை மூடிக்கொண்டு இருளில் புகுந்து ஓடினார். பெருமூச்சுடன் நின்று கண் திறந்தபோது அது வாடியான் தெருவாகவே இருந்தது.

ஆத்திரமும் பயமும் கொண்டவராக தனியே உரக்க தெருவின் பிறப்பைக் கொச்சைப்படுத்தி வசையிட்டார். நிசப்தம் தெருவை அடர்ந்து ததும்பியது. செய்வதென்ன எனப் புரியாமல் தரையில் உட்கார்ந்தார். வீடுகளுக்குள் உறங்கும் மனிதர்கள் மீது கோபம் திரும்பியது. அவர்களையும் வசைத்தார். யார் வீட்டுக் கடிகார ஒலியோ கேட்டுக்கொண்டிருந்தது. கதவை தட்டி யாரையாவது எழுப்பி உதவி கேட்டால்? நினைத்தவுடனே என்ன சொல்லி உதவி கேட்க என்ற யோசனையும் தோன்ற, மௌனமாகிக் கொண்டார். தன் வாழ்நாள் முடியப்போகிறதோ, ஸர்ப்பம் போல தெரு தன் வாலைத் தானே கவ்விக்கொண்டிருக்கிறதா. எழுந்து நடந்து தெரு முனை வரை சென்றார். அங்கிருந்து

திரும்பிப் பார்த்தபோது வியெஸ்வி வீடு தொலைவில் தெரிந்தது. சுப்பையா கோனார் சந்து புலப்படவில்லை. தெருவின் வட்டம் சுருங்கிக்கொண்டே வந்து நத்தைக் கூடு போல ஆகிவிடக் கூடுமோ. என்ன இழவு யோசனைகள் என விரல்களை இறுக்கிக் கொண்டார். பள்ளத்தைத் தாண்டிக் குதிப்பது போல இருளைத் தாண்டிக் குதித்தால் அடுத்த தெரு வந்துவிடாதா? உடல் வலியுடன் வேஷ்டியை மடித்துக் கட்டிக்கொண்டார். வேகமாக இருளில் தாவிக் குதித்தார். எதன் மீதோ மோதி அவர் கீழே விழும் சப்தம் அதிர்ந்தது. விழுந்த இடத்தில் ஒரு கை ஊன்றி தலை தூக்கிப் பார்த்தார். காரையார் வீட்டில் லைட்டைப் போட்டுக் கொண்டு யாரோ கதவு திறக்கும் சப்தம் கேட்டது. ஒரு பெண் கதவைத் திறந்துகொண்டு வாடியான் தெருவில் இறங்கி, கையில் இருந்த குப்பைக் கூடையுடன் வலது பக்கம் மெதுவாகத் திரும்பி இருளில் நடந்து அவர் விழுந்து கிடந்த இடத்தருகே வந்து குப்பைத் தொட்டியில் கொட்டிவிட்டு அவரைப் பார்க்காது திரும்பிப் போனாள். அவர் உடனே தெருவை ஏறிட்டுப் பார்த்தார். அங்கே சுப்பையா கோனார் சந்து என்ற பெயர் தெரிந்தது.